**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சிறுகதைகளை மூன்றாக வகைப்படுத்தியவர் யார்?
2. புதுமைப்பித்தனின் இயற்பெயர் யாது?
3. சாகித்திய அக்காதமி பரிசு பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் யார்?
4. பெண்விடுதலை பேசும் சிறுகதை ஒன்றின் பெயரினைக் குறிப்பிடுக.
5. "மோகமுள்" புதினத்தின் ஆசிரியர் யார்?
6. சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயரிட்டவர் யார்?
7. சு. சமுத்திரத்தின் முதல் சிறுகதை எந்த இதழில் எப்போது வெளிவந்தது?
8. "வீட்டின் மூலையில் ஒரு சமையலறை" என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?
9. "தமிழ்நாட்டின் தாக்கரே" எனப் பாராட்டப்படுபவர் யார்?
10. துப்பறியும் நிபுணரைக் குறிப்பிடுக.
11. 'குறிஞ்சித்தேன்' என்னும் புதினத்தின் ஆசிரியர் யார்?
12. குடும்பத்தின் நங்கூரமாகச் செயல்படுபவர் யார்?
13. 'புதிய தரிசனங்கள்' என்னும் புதினத்திற்கு எந்த விருது கிடைத்தது?
14. அறிவியல் ஆட்சியில் எந்த எந்த விளையாட்டுகள் தடைசெய்யப்பட்டன?
15. 'என் இனிய இயந்திரா' என்ற புதினத்தின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுகதையின் இலக்கணம் யாது?
2. விந்தனின் நடை குறித்து எழுதுக.
3. 'யுகசந்தி' கதையின் கதைக் கரு யாது?
4. பிரபஞ்சன் கையாண்ட உவமைகள் எப்படிப்பட்டவை? சான்று தருக.
5. பாத்திரப் படைப்பின் உத்திகளைக் குறிப்பிடுக.
6. துப்பறியும் புதினங்கள் என்றால் என்ன?
7. பின்நோக்கு உத்தி (Flash back) என்றால் என்ன?
8. சுஜாதாவின் படைப்புகளைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சிறுகதை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கினைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அண்ணாவின் சமூகச் சிந்தனையுடைய சிறுகதைகள் குறித்து விளக்கி வரைக.

2. (அ) கு. அழகிரிசாமி தம் சிறுகதை மூலம் வெளிப்படுத்தும் படைப்பாக்க உத்திகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) புதினங்களில் இடம் பெறும் கருப்பொருள்கள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) 'தியாக பூமி' என்னும் புதினத்தில் இடம்பெறும் கதை மாந்தர்களின் பண்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'என் இனிய இயந்திரா' புதினத்தில் ஆசிரியர் குறிப்பிடும் அறிவியலாட்சியும் வாழ்வில் மாற்றங்களையும் குறித்து எழுதுக.

❋❋ ❋